**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**

**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.274/15</u>**

2023-ம் ஆண்டு மார்ச் திங்கள் 09-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு.சம்மந்தன், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.சம்மந்தன், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த.பெ.செல்லபெருமாள். |
| கிராமம் | - வடபூண்டிபட்டு |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

<u>09.03.2023</u>

<u>வா.சா.1.</u>

<u>கூடுதல் முதல் விசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் கூடுதல் பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன். தாவா 11வது அயிட்ட சொத்தான சர்வே எண்.119/4 குறித்த நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா தாக்கல் செய்துள்ளேன். ( **நத்தம் சர்வே எண்.119/4-க்கு உண்டான தூய சிட்டா உண்மை நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) தாவா 12வது அயிட்ட சொத்தினை லோகம்மாள் என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்துள்ளேன். ( **10.08.1993 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ) தாவா 17வது அயிட்ட சொத்தினை ரங்கநாதன் என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றதற்கான

கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்துள்ளேன் ( **29.06.1995 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) மேற்படி சொத்தை ரங்கநாதன் என்பவர் சுந்தரவள்ளி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதற்கான அசல் கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். ( **10.07.1980 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னுடைய பிரமானத்தை ஏற்று தாவாபடி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கிறஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.